Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சோழர்கால தனித்துவமிக்க காலாந்தக சிற்பத் தொகுதி -ஓர் ஆய்வு (காலம் கிபி 950- கிபி 985)

38

**கி. வெங்கடேசன்[1] & முனைவர் திரு ஜெயசங்கர்[2]**
**[1]தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப்பல்கலைக்கழகம்**
**சென்னை-600 028 மின்னஞ்சல் : desingvenkat@yahoo.com**
**[2]விரிவுரையாளர், அரசினர் கட்டிட மற்றும் சிற்பக் கல்லூரி மாமல்லபுரம்**

**ஆய்வுச் சுருக்கம்:-**

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருக உள்ள ஆடுதுறை ஆபத்சஹாயேஸ்வரர் கோயிலிலுள்ள காலாந்தக சிற்பத் தொகுதியின் காட்சி வடிவமைப்பை ஆய்வு பொருளாக மேற்கொள்ளப்படுகிறது.

1. ஆபத்சஹாயேஸ்வரர் கோயில் வரலாறு
2. மார்க்கண்டேயர் கதையும் காலசம்ஹார நிகழ்வும்
3. சிற்பத் தொகுதியின் நிழற்படம், ஆய்வு விளக்க கோட்டோவியங்கள் மற்றும் விளக்கங்கள்

என்ற மூன்று பிரிவுகளாக ஆய்வின் தரவுகள் பகுக்கப்படுகின்றன.

**திறவுச்சொற்கள் :-**

| | |
|---|---|
| காலாந்தகர், காலசம்ஹாரர் | காலனை அழிப்பவர் |
| கோஷ்டம் | கருவறையில் வெளிப்புற சுவரில் தனிச் சிற்பங்களுக்கான மாடம் போன்ற பகுதி . |
| காலன் | எமன் |
| ஆபத்சஹாயேஸ்வரர் | இன்னல்களிலிருந்து காப்பவர். |

**முன்னுரை:-**

தமிழ் கலையுலகம் என்பது நீண்ட நெடிய மரபினை கொண்டது என்பது யாவரும் அறிந்ததே. அவ்வகையில் நம் முன்னோர்கள் ஒரு கதையினை அல்லது அதில் வரும் நிகழ்வை ஓவியமாகவோ, சிற்பமாகவோ காட்சிப்படுத்தும் விதமென்பது தனித்துவமிக்க எளிமையான பாங்கினை கொண்டு விளங்குவதை பல இடங்களில் காணலாம்.

தமிழக கலை வரலாற்றில் கிபி ஐந்து ஆறாம் நூற்றாண்டுகளில் ஆட்சி அதிகாரத்தில் உச்சத்திலிருந்த பல்லவர்கள் தமது கோயிற் கட்டடக்கலையில் புராண நிகழ்வுகள் பலவற்றை சிற்பத் தொகுதிகளாக படைத்தனர். பல்லவர்களுக்கு பின்பு ஆட்சிக்கு வந்த சோழர்கள் சிறப்புமிக்க பல கோயிற்பணிகளை தொடர்ந்தனர். பல்லவர்கள் போல் அளவில் பெரிய சிற்பத் தொடர்களை படைக்காவிடினும் தமது கோயிற் கட்டடங்களின் அதிஷ்டானத்தின் மேற் கண்டபாதத்தில் குறுஞ்சிற்பத் தொகுதிகளாகவும், சில கோயில்களில் கருவறை வெளிப்புறச் சுவர்களில் புடைப்பு சிற்பமாகவும் காட்சிப்படுத்தியுள்ளனர். அவ்வகையில் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகிலுள்ள ஆடுதுறை எனும் ஊரில் அமைந்துள்ள ஆபத்சஹாயேஸ்வரர் கோயில் காலசம்ஹார சிற்பத் தொகுதியினை ஆய்வு பொருளாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இங்குள்ள காலசம்ஹார சிற்பத் தொகுதி ஏனைய கோவில்களில் உள்ள காட்சி வடிவமைப்பினை காட்டிலும் தனித்துவமிக்கதாகும். இவ்வாய்வுக்கான கண்ணோட்டம் மூலம் நம் மரபின் மற்ற சிற்பத் தொகுதிகளில் புதிய தரவுகளை வெளிக்கொணர ஏதுவாகும்.

**ஆடுதுறை ஆபத்சஹாயேஸ்வரர் கோயில் தல வரலாறு**

தற்போது கும்பகோணம் அருகேயுள்ள ஆடுதுறை என்று வழங்க பெரும் ஊர் ஆதியில் தென்குரங்காடுதுறை எனும் பெயர் பெற்று விளங்கியுள்ளது. ஏனெனில் அதற்கு மூலமாக வாலியின் தம்பி சுக்ரீவன் தன் அண்ணன் வாலியுடனான சண்டையின் நிமித்தம் புகலிடம் வேண்டி, இத்தலத்திற்கு வந்து ஆபத்சஹாயேஸ்வரரை வழிபட்டு ராமபிரானால் அன்பைப் பெற்று இழந்த ராஜ்யத்தை அடைந்ததாக வரலாறு உள்ளது. இந்த நிகழ்வின் காரணமாக குரங்கினத்தை சேர்ந்த சுக்ரீவன் வழிபட்டதாலும் காவிரியின் தென்கரையில் கோயில் அமைந்துள்ளதாலும் தென்குரங்காடுதுறை என அழைக்கப் பெறலாயிற்று. பின்னாளில் கிபி 950 – கிபி 985 க்கும் இடைப்பட்ட காலத்தில் முற்கால சோழமன்னரான சிவஞான கண்டராதித்தரின் பட்டத்தரசி செம்பியன் மாதேவியர் இக்கோயிலை திருப்பணி கண்டுள்ளார். கோயில் கட்டுமானமானது முழுக்க முற்கால சோழர்கால பாணியில் சிறப்புற அமைக்கப் பெற்றுள்ளது. மேலும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் தேவாரப்பாடல் பெற்ற தலமாகவும் உள்ளது. கருவறையின் கோஷ்டங்களில் விநாயகர், நடராஜர், தட்சிணாமூர்த்தி முதலிய அழகிய சிற்பங்கள் உள்ளன. மேலும் நாம் ஆய்வு மேற்கொள்ளும் காலாந்தக சிற்பத் தொகுதி கருவறையின் தென்புறத்தில் கோஷ்ட விநாயகரின் மேற்பகுதியில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**மார்க்கண்டேயர் கதையும் காலசம்ஹார நிகழ்வும்:-**

மிருகண்ட முனிவர், மருத்துவதி தம்பதியருக்கு நீண்ட வருடமாக குழந்தைப்பேறு இல்லாமல் வருந்தினர். அவ்வாறு இருக்கையில் சிவனை நோக்கி தவமிருந்து மார்க்கண்டேயன் என்ற குழந்தையை பெற்றனர். அவர்கள் மார்க்கண்டேயனின் ஜாதகத்தை பார்த்து அவர் 16 ஆண்டுகள் மட்டுமே ஆயுளை கொண்டுள்ளார் என்பதை அறிந்து அறிவில் சிறந்த தம் மகவை இழக்க மனமுறாது வருந்தினர். மார்க்கண்டேயனும் 16 ஆம் வயதை அடைந்ததும் பெற்றோர் மிக்க கவலையுடன் மனம் வருந்தினர். தம் பெற்றோரின் மனவருத்தத்தின் காரணமறிந்த மார்க்கண்டேயன் தம் நிலையில்

தடுமாறாது சிவனை நோக்கி தவம் புரியலானார். நாள் தோறும் இடையறாது சிவலிங்கத்தை பூசித்து வந்தார். அச்சமயம் எமனும் தன் கணக்கை முடிக்க மார்க்கண்டேயனை நோக்கி வந்தார். மார்க்கண்டேயனை தம்முடன் வருமாறு எமதர்மன் அழைத்தார்.


மார்க்கண்டேயன் மறுக்கவே எமன் தம் பாசக்கயிற்றை மார்க்கண்டேயன் மீது வீசினார். சமயோசிதமாக சிவனே கதியென சிவலிங்கத்தை கட்டி அணைக்கலானார். எமன் வீசிய பாசக்கயிறோ மார்க்கண்டேயனுடன் சிவலிங்கத்தையும் சேர்த்து பற்றியது. ஆதலால் தம் மேனியில் பாசக்கயிறு விழுந்ததால் கோபாவேசமுற்ற சிவனார் உக்கிரமூர்த்தியாக பெருவுருவமாய் வெளிப்பட்டு காலனை தமது சூலாயுதத்தால் வதைத்தார். தம்மை சரணாகதியடைந்த மார்க்கண்டேயனுக்கு என்றும் பதினாறு வயது பாலகனாய் ஞானத்துடன் வாழ சாகாவரம் அளித்தார். இந்நிகழ்வை உள்ளடக்கியது மார்க்கண்டேய புராணம். இது இந்து தொன்மவியலின் பதினெண் புராணங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.


**சிற்பத் தொகுதியின் நிழற்படம், ஆய்வு விளக்க கோட்டோவியங்கள் மற்றும் விளக்கங்கள் :-**

**காலாந்தக சிற்பத்தொகுதியின் நிழற்படம் :**



**விளக்கப்படம்-1** **துணைவிளக்கப்படம்**



:


•

விளக்கப்படம் ஒன்று காலாந்தகச் சிற்பத் தொகுதியின் பிரதிவடிவமாகும். இதில் கதை நகர்வு என்பது காலன் முதலில் மார்க்கண்டேயன் மீது பாசக்கயிறை வீசுகிறார். மார்க்கண்டேயர் சிவலிங்கத்தை தழுவியுள்ளார் பின்பு உக்கிரத்துடன் நான்கு கரங்களுடன் சிவன் விஸ்வரூபங்கொண்டு தம்மை எதிர்க்க வந்த எமனை சூலாயுதங்கொண்டு வதம் செய்கிறார். இந்த அமைப்பானது கோட்டோவியத்தின் குறியீடுகள் கொண்டு அணுகும்போது வட்டவடிவத்தில் காட்சி அமைந்துள்ளது என்பதை எளிதில் அறியலாம்.

- பெரும்பாலும் நமது மரபில் துணை விளக்கப்படத்தில் உள்ளவாறு வலமிருந்து இடமாக காட்சிகளின் நகர்வு அமையும்.
- அரிதாக வட்டவடிவத்தில் நிகழ்வானது காட்சிப்படுத்தியுள்ளமை நம்மை ஆய்வு மேற்கொள்ள தூண்டுதலாகிறது.

ஆகவே ஏன் இக்காட்சியமைப்பு வட்ட வடிவத்தில் அமைந்துள்ளது என அனுமானிக்கையில் இந்திய புராணங்களுக்கு கதை சொல்லுவதின் மூலமாக ஒரு நீதியை உணர்த்துதல் என்ற அடிப்படையில் மார்க்கண்டேயன் கதையை உற்று நோக்கும் போது மானுடராய் பிறக்கும் யாவருக்கும் பதினாறு வயது பருவம் என்பது காம, வெகுளி, மயக்கம் முதலிய காலனுக்கு நிகரான தீய சிந்தனைகள் ஆட்கொள்ள நேரிடும். அச்சமயம் தீய சிந்தனையிலிருந்து விலகி ஞானமாகிய சிவத்தை தழுவி கொள்கிறவர்கள். இளமை குன்றாத நல்வாழ்வு பெறுவர் என்பதான உருவகம் புலப்படுகிறது. இது அநேக காலத்திற்கும் நடக்கக் கூடிய வாழ்வியல் இயக்க நியதியாகும். ஆகவே இந்நிகழ்வு அதன் மூலமான இயக்க விதியின் தன்மைகளை கருத்தில் கொண்டு சோழ கலைஞர்கள் வட்டமாகிய இயக்க வடிவத்தில் அமைத்திருப்பது தந்நிகரற்ற தனித்துவமான அவர்களின் காட்சி வடிவமைப்பு திறனை நமக்கு உணர்த்துகிறது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513




**விளக்கப்படம் -2 :-**

இச்சிற்பத் தொகுதியின் காட்சிவடிவமைப்பில் மார்க்கண்டேயன், எமன் ஆகியோர் ரூப வடிவமாகவும், சிவலிங்கம் அரூரூப வடிவமாகவும், காலாந்தகரை விஸ்வரூபமாகவும் அமைத்துள்ளமை காட்சி வடிவமைப்பில் சிறந்த சாதனையாக கருதலாம்.

**முடிவுரை:-**

தொன்று தொட்டு இடையறாது இயங்கி வந்த கலைமரபினை கொண்டது. தமிழர்களுக்கு தனிச் சிறப்பாகும். அவ்வகையில் கிபி 950 - கிபி 985 க்கும் இடையில் பல கோயில்களை கற்றளிகளாக திருப்பணி கண்டவர். சோழப் பட்டத்தரசியார் செம்பியன் மாதேவியாருகும். நமது மரபில் பல்வேறு கதைகளிருக்க அவர் இக்கதையினை காட்சிப் படுத்தியதின் மூலம் சமூக மக்களின் வாழ்வியல் ஒழுக்க நியதியின் மேல் அவர் கொண்ட அன்பை அக்கறையை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது. மேலும் இக்காட்சியானது கருவறையின் வெளிப்புறச் சுவரில் பார்வையாளர் எளிதில் கண்ணுறத்தக்க வகையில் அமைந்துள்ளது. இன்னுமொரு சிறப்புத்தன்மை கொண்டதாகும். ஆகவே சோழர்களின் ஆடுதுறை ஆபத்சஹாயேஸ்வரர் கோயில் காலந்தக சிற்பத் தொகுதியை ஆய்வு மேற்கொண்டதில் மூலம் நமது முன்னோர்களின் கலை வெளிப்பாட்டு தன்மையின் தன்னிகரற்ற சிந்தனை முறையை அறிய ஏதுவாகிறது. மேலும் இதுபோன்ற சிற்பத் தொகுதிகளை ஆய்வு செய்யவும் புதிய தரவுகளை வெளிக்கொணரவும் தூண்டுதலாக அமைகிறது. இது நமது சமூக கலை பண்பாட்டிற்கும் கலை மாணவர்களுக்கும் பயனுறும் எனலாம்.

**துணை நூல் பட்டியல் :-**

சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும், ஓவியங்களும் – முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன்

பிற்கால சோழர் சரிதம் - சதாசிவ பண்டாரத்தார்

தமிழ்நாட்டுத் திருக்கோயில் மரபுகள் - பொன்முகிலன்

இந்தியா ஓவியம் - திரு. சிவராமமூர்த்தி

தென்னிந்திய கோயில்கள் - கே ஆர் சீனிவாசன்

சிற்பச்செந்நூல் - திரு கணபதி ஸ்தபதி

ஓவியப் பாவை - திரு ரா. நாகசாமி